**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்</u>**

**<u>O.S.No.181/2022</u>**

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | தேவராஜன் |
| தகப்பனார் / கணவர் | .. | நடராஜன் |
| வயது | .. | 47 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | |
| தாலுக்கா | .. | |

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆம் நாள் திங்கட்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**<u>8 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என் தகப்பனார் பெயர் நடராஜன். என் தகப்பானருடன் பிறந்தவர் 4 நபர்கள் அவருடன் சேர்ந்து 5 நபர்கள். என் தாத்தா பெயர் சிங்கார முதலியார். வைத்திநாத முதலியார் தான் மூத்தவர், இரண்டாவது காசிநாதன், மூன்றாவது மகன் என் தகப்பனார், நான்காவது சாமிநாதன், 5 வது சம்பந்தன் ஆவார்கள். என் தகப்பானார் மற்றும் சாமிநாத முதலியார் ஆகியோர்களை தவிர வேறு யாரும் திருமணம் செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் நடராஜனுக்கு மூன்று மகன்கள் மற்றும் ஒரு பெண் உள்ளனர் என்றால் சரிதான். சாமிநாத முதலியாருக்கு 2 பெண்கள் மற்றும் ஒரு மகன் என்றால் சரிதான். என்னுடைய தந்தையையும், சித்தப்பாவும் சிறுவர்களாக இருக்கும்போதே சிங்கார முதலியார் இறந்துவிட்டார் என்றால் எனக்கு

தெரியாது. நான்கு தம்பிகளையும் வைத்தியநாத முதலியார் தான் பராமரித்து கொண்டும் குடும்பத்தை பார்த்து வந்தார் என்றால் அதுபற்றி தெரியாது. வைத்தியநாத முதலியார் நான்கு தம்பிகளையும் ஒரே மாதிரியாக தான் பாவித்து வந்தார் என்றால் காசிநாதன், சாமிநாதன், சம்பந்தன் ஆகியோருடன் பிரச்சனை ஏற்பட்டு 1976 ல் எங்களுடன் வந்தவாசிக்கு வந்துவிட்டார். நான் பிறந்த வருடம் 1976 தான். வைத்தியநாத முதலியாருடன் பிரச்சனை என்று என் தந்தையார் சொல்லிதான் எனக்கு தெரியும். என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. வைத்தியநாத முதலியார் உயிருடன் இருந்தவரையில் அவருடன் மேற்படி நபர்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரியல்ல. அவர் 1976 ல் இருந்து இறக்கும் வரை எங்களுடன் தான் இருந்தார். எங்களுடன் இருந்தார் என்பதற்கான ஆவணம் ஏதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளிர்களா என்றால் இல்லை. வைத்தியநாத முதலியாருக்கு நேரடியான வாரிசுகள் இல்லை என்றால் சரிதான். அவருக்கு வாரிசுகள் என்றால் அவரது உடன் பிறந்த சகோதர்களும், சகோதர்களுக்கு பிறந்த வாரிசுகள் தான் என்றால் சரிதான். வைத்தியநாத முதலியாருக்கும் அவரது சகோதரர்களுக்கும் சொந்தமான பூர்விக சொத்துக்கள் வெண்குணம் கிராமத்தில் 8 ஏக்கர் நிலம், 1 தட்டை வீடு, 1 மெத்தை வீடு, 2 மனை இருக்கிறது என்றால் சரிதான். அந்த மெத்தை வீட்டை யார் கட்டினார் என்றால் பொது குடும்ப வருமானத்தில் இருந்து காசிநாதன் கட்டினார். 2 கிணறு பம்பு செண்டு உள்ளது. கிணறு பம்பு செண்டை யார் பராமரித்து வந்தார்கள் என்ற விவரம் நான் பிறந்து விவரம் அறிந்த பிறகு தான் எனக்கு தெரியும், அதன் முன்னர் யார் பராமரித்து வந்தார் என்ற விவரம் எனக்கு

தெரியாது. மேற்டிப நிலத்தை யார் பராமரித்தார் என்ற விவரத்தை என் தந்தை என்னிடம் கூறினாரா என்றால் நான் அவரிடம் கேட்கவில்லை. எனக்கு கருத்து தெரிந்து வெண்குணம் கிராமத்தில் இருந்து நிலங்களை வைத்தியநாத முதலியார் பயிர் செய்யவில்லை, காசிநாதன், சாமிநாதன், சம்பந்தன் தான் பயிர் செய்தார்கள். சம்பந்தன் என்பவர் இந்த தாவா சொத்து உட்பட பூர்விக குடும்ப சொத்துக்களில் பாகம்கோரி OS 72/2014 செய்யாறு, சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும். மேற்படி வழக்கில் நானும், என் தகப்பனாரும் பிரவாதிகள் ஆவர். மேற்படி வழக்கு வந்தவாசி, சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றலாகி OS 47/2025 என்று நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் காசிநாதன், சாமிநாதன், சம்பந்தன் தான் பயிர் செய்தார்கள், என் பயிர் வைக்கவில்லை என்ற விவரம் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வது போல் மேற்படி நபர்கள் பயிர்வைக்கவில்லை என்றும் வைத்தியநாத முதலியார் பயிர் வைத்துவந்தார் என்றால் சரியல்ல. வைத்தியநாத முதலியாருக்கு விவசாயம் மட்டும் தான் தொழில் என்றால் இல்லை நெல் வியாபாரம் மற்றும் பணம் வட்டிக்கு விடும் வேலை செய்து வந்தார். பணம் வட்டிக்கு கொடுக்கவேண்டும் என்றால் அதற்கு ஒரு மூலதனம் வேண்டும் என்றால் அவரது அவரது பெரியம்மா காமாட்சியம்மாள் தென்இலுப்பையிலும் அத்தை தாயிம்மாள் வீரம்பாக்கம் கிராமத்தில் சொத்து கொடுத்துள்ளார்கள். பெரியம்மா கொடுத்த சொத்தை அவர் விற்று விட்டார் என்றால் சரிதான். அத்தை வைத்தியநாத பெயரில் எழுதிவைத்த 2 சொத்துக்களை விற்று கொடுக்கல் வாங்கல் செய்தார். மேற்படி பெரியம்மா குடும்பத்தில் மூத்தவர் என்பதால் வைத்தியநாத

முதலியார் பெயரில் சொத்தை எழுதி கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் எழுதி கொடுத்த வருடம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி நபர்கள் சொத்தை எழுதி வைக்கும் போது வைத்தியநாத முதலியாரின் தம்பிகள் மைனர் என்பதால் வைத்தியநாத முதலியார் பெயரில் எழுதி வைத்தார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. கூட்டு குடும்ப சொத்தின் வருமானத்தில் சொத்து வாங்கியதால் சம்பந்தன் என்பவருக்கு அதில் பங்கு உண்டு என்றால் இல்லை. அதேபோல கண்ணம்மாள், நாகப்பன் ஆகியோரிடம் இருந்து கிரையம் பெற்ற தாவா சொத்துக்களிலும் 8ம் பிரதிவாதியான சம்பந்தன் என்பவருக்கும் மற்ற சகோதரர்களுக்கும் பங்கு உண்டு என்றால் சரியல்ல. வைத்தியநாத முதலியார் இறக்கும் போது வயது எவ்வளவு இருக்கும் என்றால் 80 இருக்கும். எத்தனை நாட்களாக உடல் நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் 6 மாதம் உடல் நிலைய சரியில்லாமல் இருந்தார். தொண்டையில் உணவு குழல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இருந்தார். அதனால் அவர் பேசாமல் இருந்தார் என்றால் சரியல்ல. தன்னிச்சையாக நடக்க முடியாமல் இருந்தார் என்றால் சரியல்ல. அவரது பணிகளை அவரால் மேற்கொள்ள இயலாது நிலையில் இருந்தார் என்றால் சரியல்ல. இறுதி 6 மாத காலமாக அவர் நல்ல மன நிலையில் இல்லை என்றால் சரியல்ல. வைத்தியநாத முதலியார் நன்கு கையெழுத்து போடக்கூடியவர் என்றால் சரிதான். ஆனால் வா.சா.10ல் அவரது கைரேகை தான் உள்ளது. 2018 பத்திர பதிவு அலுவலகத்தில் கண்காணிப்பு கேமிரா வந்துவிட்டது என்றால் அதுபற்றி தெரியாது. வா.சா.10ல் சாட்சி கையொப்பம் போட்டுள்ள வெங்கடேஷ் எனது தெருவில் வசிப்பவர் என்றால் சரிதான். சாட்சிகள் இருவரும் வைத்தியநாத முதலியாருக்கு

அறிமுகம் இல்லை என்றால் சரியல்ல. வைத்தியநாத முதலியார் சுய நினைவு இல்லாதபோது அவரை கட்டாயப்படுத்தி மேற்படி ஆவணம் எழுதி வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. வைத்தியநாத முதலியாருக்கு 2ம் நிலை வாரிசுகள் 10 க்கும் மேற்பட்ட நபர்கள் இருக்கும்போது மற்றவர்களுக்கு சொத்துரிமை கொடுக்காமல் இருந்த காரணத்தை வா.சா.10ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பொதுவாக உயிலில் அல்லது செட்டில் மெண்டில் வாரிசுகள் ஒருவருக்கு எழுதிக்கொடுக்கும் போது மற்றவர்களுக்கு எழுதி வைக்காதத்தற்கான காரணம் குறிப்பிடுவது வழக்கம் என்றால் அதுபற்றி தெரியாது. நான் M.A படித்துள்ளேன். எனக்கு வைத்தியநாத முதலியார் எழுதி வைத்த உயில் செல்லத்தக்கது அல்ல, நான் தயார் செய்த உயில் என்றால் சரியல்ல. அதனால் எனது வழக்கை தள்ளுபடி செய்யவேண்டு என்றால் சரியல்ல.